வரவு செலவுக்கு ஒப்புதல் அளிப்பது போன்றவற்றில் நடவடிக்கை எடுக்கிறோம். தனி அதிகாரி வேண்டுமென்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திருக்கண்மாலீஸ்வரர் ஆலயம்

* 492 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரத்திலுள்ள திருக்கண்மாலீஸ்வரர் தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பயணியர் விடுதியும் கல்யாண மண்டபமும் கட்ட அரசு எப்போது உத்தரவிட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ? காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) கிருஷ்ணராயபுரம் திருக்கண்மாலீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான எஸ்.எப். நெ. 114/4-ல் ஏக்கர் 0.16 நிலத்தில் ஆலயப் பொறுப்பில் கல்யாண மண்டபமும் பயணியர் விடுதியும் கட்ட, கோயம்புத்தூர் துணை ஆணையர், தனது 31—5—70 தேதிய உத்தரவில் பணித்துள்ளார். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி மன்றம் அந்த இடத்தில் கல்யாண மண்டபம் அமைப்பதை பள்ளி நலனையும் பொது நலனையும் முன்னிட்டு, ஆட்சேபித்ததால் கல்யாண மண்டபத்தையும், பயணியர் விடுதியையும் கோவிலுக்கு முன்புறத்தில் கட்ட அறங்காவலர் முடிவெடுத்து திட்டம் நடவடிக்கையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஒவ்வொரு லிஸ்டட் டெம்பிளிலும் ஏழை மக்களுடைய வசதிக்காக, கல்யாண மண்டபம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது அப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் ஒரு கல்யாண மண்டபத்தை தனியார் முயற்சியில் அமைக்க முன்வருகிறார்கள். அப்படி யாராவது அமைக்க முன் வந்தால் கோவிலை ஒட்டிக் கட்ட உத்தரவு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அப்படித் தனிபட்டவர்கள் கோவில் சார்பில் கட்ட முன்வந்தால் அதை வரவேற்கிறோம்.

Bifurcation of Devasthanams.

* 493 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether there are proposals to bifurcate Devasthanams involving administration of more than one temple;

(b) if so, the details thereof; and

(c) whether it is a fact that Tirupparankundram temple will come under separate administration?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலிருந்து திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி ஆலயத்தைப் பிரித்தல்.

2. ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தைப் பிரித்தல்.

(உ) இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த திருப்பரங்குன்றம் ஆலயத்தை எப்பொழுதிருந்து தனியாகப் பிரித்து இயங்கும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகத்தோடு, திருப்பரங்குன்றம் கோவிலோடு, இன்னும் 10, 12 கோவில்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணத்தால் வருமானம் இல்லாத ஆலயங்களைப் பராமரித்து வருகிறோம். வருமானம் தற்போது அதிகம் உள்ளவற்றைப் பிரித்து வைக்க பரிசீலனை செய்கிறோம். பரிசீலனை முடிந்த பிறகு இது செயல்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி இணைந்திருந்த கோவில்களைப் பிரிக்கும்போது எந்த அடிப்படையில் பிரிக்கிறார்கள் ? மூன்று மைல், ஐந்து மைல் சுற்றளவில் உள்ளவை என்றோ அல்லது வருமானம் இவ்வளவு என்றோ வைத்துப் பிரிக்கிறார்களா ? டிபார்ட்மெண்டுக்கு என்ன 'கைட்-லைன்ஸ்' கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வருமானத்தின் அடிப்படையில் பிரிக்கின்றோம். அந்த அந்த கோவில் வருமானம் அதை நடத்திச் செல்வதற்கு போதுமானதாக இருந்தால், தனியாகப் பிரிக்கிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, பெரிய கோயில்களில் இரண்டு மூன்றாக, தனித் தனியாகப் பிரிக்கப் போகிறோம் என்றார்கள். எவ்வளவு பாடுபட்டாலும் போதுமானதாக இல்லாத இந்த நிலையில் இரண்டு மூன்றை சமாளிக்க முடியாமல், சாமிகளுக்கு சலுகைகள் குறைந்துவிடுமே. ஆகவே, இவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்துச் செயல்பட அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதெல்லாம் வருமானத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலைப் பிரிக்கப் போகிறோம் என்று பல முறைகள் சொல்லப் பட்டிருக்கிறது. பரிசீலனையில் இருந்துகொண்டே இருக்கிறது. ஆனாலும், அப்படிப் பிரிவினை ஆகும் வரையில், கோவில் நிர்வாகத்தைச் செய்ய தனி நிர்வாகியை அமைக்கவும், அதே போல், ட்ரஸ்ட் போர்டில் ட்யூ ரெப்ரசண்டேஷன் கொடுக்கவும் அரசு முன்வருமா ?

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது மீனாட்சி ஆலயத்தில் இருக்கும் நிர்வாக அதிகாரியே அதையும் செய்கிறார்கள். தனியாக ஒருவர் அங்கே தேவையில்லை யென்றாலும், பொதுமக்களுக்கு வசதி செய்யவும், ஏதாவது குறைபாடுகள் இருந்தால், தெரிவித்தால் நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அமைச்சர் அறிக்கை.

மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக்குழுவிற்குக் கூடுதல் உறுப்பினர்களை இணைப்பது குறித்து முதலமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில இந்திய தேசியப் பாதுகாப்புக் கிளைக் குழுவில் ஏற்கனவே உறுப்பினர்களும் தலைவர்களும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் மேலும் உறுப்பினர்களாக, பார்வேர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. மூக்கையா தேவர் அவர்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாண சுந்தரம் அவர் களையும், தமிழ்நாடு சோஷலிஸ்ட் பார்ட்டியின் தலைவர் திரு. பி. வேலுசாமி அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) திரு. இராஜாஜி மீதும், 'ஸ்வராஜ்யா' வார ஏட்டின் மீதும் அரசு எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கை குறித்து.

(ஆ) 'ஸ்வராஜ்யா' வார ஏட்டில் யாஹ்யாகானை ஆதரித்து திரு. ராஜாஜியால் எழுதப்பட்ட கட்டுரையும், அது கல்கி வார ஏட்டில் வெளியிடப்பட்டது குறித்தும், இவற்றை அரசு தடுக்கத் தவறியது குறித்தும்.

MR. SPEAKER : Dr. Hande has given notice of an adjournment motion under Rule 42, namely, that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the move on the part of the State Government to take action against Rajaji and the weekly 'Swarajya on account of the writings of Rajaji in the 'Swarajya', dated 11th December 1971 and the need for restraint in the use of the Defence of India Rules. Thiru M. A. Latheef and Thiru K. T. K. Thangamani have also given notice of similar adjournment motions. Now I call upon Dr. H. V. Hande to explain briefly how it comes under the purview of an adjournment motion.